வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும் எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க, ச, த, ப மிகும்.

அ + பையன் = அப்பையன் இ + செடி = இச்செடி

எ + பணி = எப்பணி

2. அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி என்ற சுட்டு, வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

அந்த + கோவில் = அந்தக்கோவில்

அங்கு + சென்றான் = அங்குச்சென்றான்

எங்கு + போனான் = எங்குப்போனான்

3. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

நூலை + படி = நூலைப்படி பாலை + குடி = பாலைக்குடி

4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம்மிகும்.

அவனுக்கு + கொடுத்தான் = அவனுக்குக்கொடுத்தான்

பணிக்கு + சென்றான் = பணிக்குச்சென்றான்.

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தண்ணீர் + குடம் = தண்ணீர்க்குடம் மரம் + பெட்டி = மரப்பெட்டி

பூட்டு + சாவி = பூட்டுச்சாவி விழி + புனல் = விழிப்புனல்.

6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

பச்சை + பட்டு = பச்சைப்பட்டு பச்சை + கிளி = பச்சைக்கிளி

7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

சாரை + பாம்பு = சாரைப் பாம்பு மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

8. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

மலர் + கண் = மலர்க்கண் தாமரை + கை = தாமரைக்கை.

9. ஒரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லினம் மிகும்.

தீ + சுடர் = தீச்சுடர் பூ + கூடை = பூக்கூடை

10. ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

அழியா + புகழ் = அழியாப்புகழ் ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

11. வன்தொடர் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு    எட்டு + தொகை = எட்டுத்தொகை

12. ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க்குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்.

ஆடு + பட்டி = ஆட்டுப்பட்டி    நாடு + பற்று = நாட்டுப்பற்று

13. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பொது + தேர்வு = பொதுத்தேர்வு    திரு + குறள் = திருக்குறள்

14. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால + பேசினான் = சாலப்பேசினான்.    தவ + சிறிது = தவச்சிறிது.

15. ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

என + கூறினான் = எனக் கூறினான்.    இனி + காண்போம் = இனிக்காண்போம்.

வல்லினம் மிகா இடங்கள்

1. அது, இது, அவை, இவை எனும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை எனும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது + பறந்தது = அது பறந்தது.

அவை + பறந்தன = அவை பறந்தன.

எது + தங்கம் = எது தங்கம்

எவை + சென்றன = எவை சென்றன.

2. ஆ, ஏ, ஓ எனும் வினா எழுத்துகளின்பின் வல்லினம் மிகாது.

அவனா + சென்றான் = அவனா சென்றான்.

அவனோ+ பேசினான் = அவனோ பேசினான்.

அவனே + சிரித்தான் = அவனே சிரித்தான்.

3. எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.

மலர் + பூத்தது = மலர்பூத்தது

வண்டு + பறந்தது = வண்டுபறந்தது.

4. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்

இத்தனை + பறவைகள் = இத்தனை பறவைகள்

எத்தனை + காக்கைகள் = எத்தனை காக்கைகள்

5. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

ஊறு + காய் = ஊறுகாய்

சுடு + சோறு = சுடுசோறு

6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

கபிலபரணர்

இரவுபகல்

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

தமிழ் + கற்றார் = தமிழ்கற்றார்.

கடல் + கடந்தார் = கடல்கடந்தார்.

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது.

பூவொடு + சேர்ந்த = பூவொடுசேர்ந்த

கபிலரோடு + பரணர் = கபிலரோடுபரணர்

9. எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது.

ஒன்று + கொடு = ஒன்றுகொடு

இரண்டு + பேர் = இரண்டுபேர்

10. வியங்கோள் வினைமுற்றுக்குப்பின் வல்லினம் மிகாது.

வாழ்க + தமிழ் = வாழ்கதமிழ்

வாழிய + பல்லாண்டு = வாழியபல்லாண்டு

11. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்களில் வல்லினம் மிகாது.

சல + சல = சலசல

பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

கற்ற + சிறுவன் = கற்றசிறுவன்

சிறிய + பெண் = சிறியபெண்

பயிற்சி : தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. அந்த பையனை நன்றாக படிக்க செய்தல் வேண்டும்.
2. வந்த பையன் சொன்னச் செய்திகளை பொறுமையாக கேட்டல் வேண்டும்.
3. நேற்று நடந்த சிறப்பான நிகழ்வுகளை கண்டுப்பலரும் வியந்தனர்.
4. கபிலப்பரணர் தமிழ்புலவர்கள்.
5. கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்குபவர்கள் நன்மை தீமைகளை அறிவர்.
6. அந்த சாலை மிக செம்மையாக காணப்படுகிறது.
7. ஒவ்வொருவரும் படித்ததனை கவனமாக குறிப்பேட்டில் எழுதி வைத்தல் வேண்டும்.